செய்ய முடியும் என்று அவர்கள் கேட்டபோது, இப்படி ஒரு கருவியை வழங்கினல், அதை இந்த நூலகத்திற்குச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அது பற்றிய முழு விவரங்களையும் கேட்டிருக்கிருர்கள். நாம் அவற்றை எழுதி அனுப்பியிருக்கிறோம். அவர்களுடைய சலுகைகளைப் பெறுவோமேயானல், அக்கருவிகளைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்யலாம்.

MR. CHAIRMAN: Members are requested to cut short their supplementaries. There are only 20 minutes more.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, 'தாங்ஸ்'. போர்டு பவுண்டேஷன் டைரக்டரிடமும், கார்னிஜி பவுண்டேஷன் ஆட்களிடமும், நிர்வாகிகளிடமும் கலந்து பேசி, இவைகளை மைக்ரோபிலிமிங் செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அவர்கள் செய்து தருவதற்கு உடன்பட்ட நிலையில் கருத்து தெரிவித்தார்கள். அரசு அனுகினல் நிச்சயமாக இதற்கு வழி பிறக்கும் என்று தெரிகிறது. இதை உடனே அனுகிச் செயல்பட வேண்டுமென்று கேட்டு, செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில் தான் முழு விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

Non-teaching Staff working in Colleges

* 40 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation regarding the non-teaching staff working in colleges, especially the non-teaching staff working in the Jain College, Madras; and

(*b*) if so, the action taken thereon by the Government?

கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத ஏனைய பணியாளர்கள்.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத ஏனைய பணியாளர்கள் சார்பாகவும், குறிப்பாக சென்னை ஜெயின் கல்லூரியில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத பணியாளர்கள் சார்பாகவும், அரசுக்கு முறையீடுகள் எவையேனும் வரப்பெற்றுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

1973 நவம்பர் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அந்த முறையீடுகளின் பேரில் அரசின் அதிகாரத்திற்குட்பட்ட விஷயங்களில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருக்கின்ற கல்லூரிகளிலும், ஜெயின் கல்லூரிகளிலும், கொடுபட்டு வந்த சம்பளத்தைக் குறைத்துத் தருகின்ற முறைகள் பற்றி கல்லூரிக் கல்வி இயக்குநரோடும் பல்கலைக்கழகத் துணைவேந்தரோடும் தொடர்பு கொண்டதில், இதில் அரசு பரிந்துரை தான் செய்ய முடியும், சட்டபூர்வமான கட்டுப்பாடு செய்ய முடியாது என்று தெரிவிக்கிறார்கள். சட்டபூர்வமான கட்டுப்பாடு கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரால், பணியாற்றும் தோட்டக்காரர், தண்ணீர் வைப்பவர்கள் போன்றவர்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அடிப்படைக்கு எக்காரணம் கொண்டும் குறையக்கூடாது என்று சொல்லலாம். அதற்கு அதிகமாகக் கொடுப்பது அவர்களுடைய இஷ்டத்தினைப் பொருத்தது. ஜெயின் கல்லூரியைப் பொருத்த வரையில் ஏற்கெனவே அதிகமாகக் கொடுத்து, இவ்வளவு இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட பின்னர் குறைந்து விட்டதாகத் தெரிகிறது. கொடுக்க வேண்டிய அளவில் அவர்கள் நிற்கிறார்கள். கொடுத்து வந்த அளவைக் கொடுக்காமல் நிறுத்தி விட்டார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த வகையில் அவர்களை வற்புறுத்த முடியாது. பரிந்துரை செய்யலாம். கூடுதலாகக் கொடுப்பதைத் தடுக்க முடியாது. அடிப்படையாக இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அந்தக் கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசுக்குச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. கல்லூரிகளில் அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரம் சட்டரீதியாக நமக்கு இல்லாமலிருக்கிற காரணத்தால், தொடக்கப் பள்ளி, செகண்டரி பள்ளிகள் தொடர்பாக சட்டம் கொண்டுவருவது போலவே, கல்லூரிகளின் நிர்வாகத்தையும் இதுபோன்று கட்டுப்படுத்துவதற்கு சட்டம் கொண்டு வருவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது உயர்நிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகளைப் பொருத்தவரையிலும், சட்டம் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதைக் கொண்டுவந்து வெற்றி பெற்ற பிறகு கல்லூரிகளைப் பொருத்த வரையில் ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்ன செய்யலாம், வயசான பையனுக்கு புத்திதான் சொல்லலாம்.

Special Chest Clinic in Stanely Hospital, Madras

* 41 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of beds attached to the Special Chest Clinic in Stanely Hospital, Madras;

(*b*) the strength of the personnel managing the same; and

(*c*) whether the same is found sufficient for the Clinic ?

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய நோய் சிறப்புப் பிரிவு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய நோய் மருத்துவச் சிறப்புப் பிரிவில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(இ) இப்பிரிவில் பணி புரியும் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(உ) அப்பிரிவுக்கு இப்பணியாளர்கள் போதுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) பத்து.

(இ) ஐந்து.

(உ) ஆம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த 10 படுக்கைகளும் ஒரே இடத்தில் இருக்கின்றனவா அல்லது பல ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'செஸ்ட் கிளினிக்' என்பதற்காக ஒதுக்கப்பட்ட படுக்கைகள் ஸ்டான்லியில் இருக்கின்றன. அவர்கள் கேட்டிருப்பது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைத் தவிர வேறு இடங்களில் இது மாதிரி 'செஸ்ட் கிளினிக்' இருக்கிறதா என்று.